Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.257 /2022 Date:27.03.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW11)
Defence:
Court:

| Name | திரு. சிலைமணி | Village | இராமநாதபுரம் |
|---|---|---|---|
| Father/ Husband Name | கரும்பன் | Taluk | இராமநாதபுரம் |
| Age | 61/2026 | Calling | ஆய்வாளர்(ஓய்வு) |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 27.03.2026 TIME 05.20 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 10.07.2021–ம் தேதி கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது, கம்பம் வடக்கு காவல்நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளர் மணியன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது முருகன் மகன் மாசாணம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நிலைய குற்ற எண். 580/21 இதச பிரிவு 279, 304(A) ஆக வழக்கு பதிவு செய்து முதற்கட்ட விசாரணையில் அன்றைய தினமே 23.00 மணிக்கு சம்பவம் இடம் பார்வையிட்டு சுரேஷ், தனபாலன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் மாசாணம், வினோத்குமார், ஜெயலட்சுமி, மகாலட்சுமி, சுரேஷ், தனபாலன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 11.07.2021–ம் தேதி காலை 08.00 முதல் 10.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டார். பின்னர் காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் பிரேத உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் அறிக்கை கொடுத்து அனுப்பினார். மேலும் அன்றைய தினம் 18.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தார். விபத்தில் ஈடுபட்ட வாகனம் TN 57 N 1379 அரசு பேருந்தினை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தார். பின்னர் வழக்கு கோப்பினை எனது பார்வைக்கு சமர்ப்பித்தார். நான் மேல் விசாரணைக்கு 13.07.2021–ம் தேதி எடுத்துக்கொண்டு சார்பு ஆய்வாளர் முதற்கட்ட விசாரணை செய்த சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்த போது சார்பு ஆய்வாளரிடம் கூறிய விபரங்களை என்னிடம் சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் 05.08.2021–ம் தேதி மோட்டார் வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மனோகரன் என்பவரையும், மருத்துவர் லோகேஷ்வரர் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடம் இருந்து சான்றிதழ்கள் பெற்றேன். பின்னர் முதல்நிலை காவலர் பாலமுருகன், சார்பு ஆய்வாளர் மணியன் ஆகியோர்களை விசாரணை செய்து

தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 05.08.2021ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4**, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5, 6**, பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.7**, உடற்கூறாய்வு சான்றிதழ், **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

அ.சா.1 அளித்த புகாரில் இவ்ழக்கு சம்மந்தப்பட்ட விபத்தானது எதிரியின் கவனக்குறைவாகவோ, அஜாக்கிரதையாகவோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் விபத்தை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். கண்ணுற்ற சாட்சி இல்லை என்பதால் எதிரி தான் தனது வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டியதாக எதிரி மீது தவறுதலான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் பேருந்தின் பின்சக்கரம் இறந்த நபரின் மீது ஏறியதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் உடற்கூறாய்வு சான்றிதழில் இறந்த நபருக்கு பெரிய சிதைவு காயம் ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ் இடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கையில் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் எந்த சாட்சி மூலம் தெரிந்துகொண்டேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.